முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 03.08.2026

O.S. No. 75/2023

வா,சா-1 – மோகன்

பிரதிவாதி தரப்பில் மறு குறுக்கு விசாரணை

1. வாசாஆ 13 மற்றும் 14 ஆவணங்கள் என்ன காரணத்திற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் புலஎண்.1090/1 ல் என் தந்தை அவரது சகோதரர்களுக்கு செய்த வாக்கால் பாகப்படி கிடைத்த பங்கு என்பதால் தாக்கல் செய்திருக்கிறேன். வாசாஆ 13 ஆவணம் யார் யாருக்கு எழுதி தந்த ஆவணம் என்றால் மேற்படி ஆவணம் 1967 ல் உள்ள ஆவணம். மேற்படி ஆவணம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்பது ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை பார்த்து யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்று சொல்ல முடியுமா என்றால் ஆண்டி நாடார் எழுதிக்கொடுக்கும் பத்திரம் சுப்ரமணிய நாடாருக்கு என்று உள்ளது.

2. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 13 ஆவணம் படிக்க முடியவில்லை என்றால் சரியல்ல. படிக்க முடிகிறது. வாசாஆ 13 ஆவணத்தில் அதை எழுதி தந்த ஆண்டி நாடாருக்கு 1.5 சென்ட் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. வாசாஆ 13 ஆவணத்தில் அவரும், அவருடைய சகோதரர் பழனிக்குமாரும் செய்து கொண்ட வாக்கால் பாகப்படி அவருக்கு 1.5 சென்ட் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. 2022 வரை எந்த அனுபவமும் எடுக்கவில்லை. வாசாஆ 13 ஆவணத்தில் மேற்படி சகோதரர்கள் அவர்களுடைய தந்தையான சுப்ரமணிய நாடார் அவர்களின் சொத்தை வாக்கால் பாகம் செய்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. சுப்ரமணிய நாடாருக்கு பழனிக்குமார், ஆண்டி நாடார் மற்றும் காசி தங்கம் ஆகியோர் வாரிசுகள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. வாசாஆ 13 ஆவணத்தில் 1090/1 க்கு உட்பட்ட 1.5 சென்டை தான் ஆண்டி நாடார், ஆறுமுக பெருமாள் நாடாருக்கு எழுதி தந்துள்ளார் என்றால் சரிதான். புல எண்.1090/1 ல் என் தந்தை வாக்கால் பாகப்படி பயன்படுத்தி வந்தார். வாசாஆ 13 ஆவணத்தில் எல்கையில் வடக்கு பக்கம் பழனிக்குமாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பழனிக்குமார் பயன்படுத்தவில்லை.

4. வாசாஆ 14 ஆவணம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் ஆறுமுக பெருமாள் நாடார், பழனிக்குமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணமாகும். மேற்படி ஆவணம் மூலம் ஆறுமுக பெருமாள் வாசாஆ 13 படி தனக்கு கிடைத்த சொத்தை பழனிக்குமாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் அதை பயன்படுத்தவில்லை. வாசாஆ 14 ஆவணம் படி புலஎண். 1090/1 ல் பழனிக்குமாருக்கு மொத்தம் 3 சென்ட் பாத்தியம் என்றால் இல்லை. பழனிக்குமாருக்கு வாசாஆ 13 ல் குறிப்பிட்டுள்ளபடி வாக்கால் ஏற்பட்ட பாக படி 1 ½ சென்டும், வாசாஆ 14 படி 1 ½ சென்டும் ஆக மொத்தம் 3 சென்ட் பாத்தியப்பட்டது என்றாலும் அந்த 3 சென்டை தான் மேற்படி பழனிக்குமார் ஆவணஎண். 1223/87 மூலம் 4 ம் பிரதிவாதியின் தந்தையான மால் நாடார் பெயருக்கு எழுதி தந்துள்ளார் என்றால் அது தவறு.

5. வாசாஆ 13 மற்றும் 14 க்கு உட்பட்ட சொத்துகளை தான் நான் இந்த வழக்கில் பி பட்டிகை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் இல்லை. பி பட்டிகை சொத்து நான் ஆவணப்படி உரிமை கோருகிறேனா அல்லது அனுபவ படி உரிமை கோருகிறேனா என்றால் ஆண்டி நாடார் மகன்களாகிய 4 பேரும், அனுபவித்து வருவதாகும். அவரவர் பங்கை பயன்படுத்தி

வருவதாகும்.

6. பி பட்டிகை சொத்தை எதன் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் மேற்படி சகோதரர்கள் அனைவருக்கும் பி பட்டிகை சொத்து பாத்தியப்பட்டது. மேற்படி சங்கதியை எனது வழக்குரையிலோ அல்லது நிருபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் நான் உரிமை கோரியுள்ள பி பட்டிகை சொத்து மால் நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், தற்சமயம் நான் மேற்படி சொத்து அதன் உரிமையாளர்களான பழனிக்குமாருக்கோ, ஆண்டி நாடாருக்கோ, வாசாஆ 13 மற்றும் 14 ஆவணப்படி அனுபவம் கிடைக்கவில்லை என்றும் அதே போல் மால் நாடாரும், பி பட்டிகை சொத்தை அனுபவிக்க வில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.